1975 மார்ச் 10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "பார்ட் டைம்"ஆக வைக்காமல், முழு நேரப் வைத்தால் வேறு பல பாடங் களுக்குரிய நேரத்தைக் குறைக்க வேண்டி வரும். மற்ற பாடங்களுக்கும் உரிய நேரம் கொடுக்க வேணடியிருக்கிறது. தொழில் அறிவு வளர வேண்டும் என்பதற்காக மற்ற பாடங்களுக்குரிய நேரத்தை அதிகமாகக் குறைப்பதற்கு இல்லை. கூடுமான வரையில் தொழிற்கல்விக்குறிய நேரத் தைக் கொஞ்சம் அதிகப்படுத்தி, மற்ற படிப்புகளுக்கு சற்று நேரத்தைக் குறைக்கலாம். தொழிற்கல்விக்கே முழுநேரத்தை ஒதுக்கினல் மற்ற வகுப்புகளின் நேரத்தைக் குறைக்கவேண்டிவரும்.

Melpuram Government School.

* 253 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there are proposals under the consideration of the Government to upgrade Melpuram Government Middle School, Kanyakumari district, into a High School?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மேல்புரம் அரசு மத்திய தரப் பள்ளிக்கூடத்தில் இப்பொழுது ஒரு உயர்நிலைப்பள்ளிக்கூடத்திற் குள்ள ஸ்ட்ரெங்க்த் இருக்கிறது. அந்த ஊரிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு செல்ல வேண்டுமென்றால், மூன்று நான்கு மைல் நடந்து மார்த்தாண்டத்திற்கு செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தத் தேவையை உணர்ந்தாவது இந்த மத்தியதரப்பள்ளியாக உள்ளதை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப்பள்ளியைச் சுற்றி ஒரு ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு நான்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஏ. எம். ஹைஸ்கூல், மருதாங் கோடு, 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆண்டிகோட்டில் ஒரு எய்டெட்–ஸ்கூல், மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அருமனை யில் ஒரு எய்டெட்–ஸ்கூல், $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அரு மனையிலேயே ஒரு அரசினர் உயர்நிலைப்பள்ளி, $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆக, நான்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அவை பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற இடத்தில் உயர்நிலைப்பள்ளியாக்குவதற்குரிய இட வசதி இருக்க வேண்டும். இட வசதியோடு ஐந்து எக்கர் நிலமும், கட்டட வசதிகளும் இருக்கவேண்டும். மேலும், டெபாசிட் கட்டவேண்டும். இந்த நிபந்தனை களையெல்லாம் பூர்த்திசெய்யும் நிலை இருந்து, அது குறித்து மாவட்ட முதன்மை கல்வியதிகாரி மூலமாக எழுதியனுப்பினல் அதுபற்றி ஆராய லாம். மற்ற பள்ளிகள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். உயர் பள்ளி துவக்கப்படுவதற்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பங்கள் அனுப்பினல் அதுகுறித்து பிறகு ஆராயலாம்.